# நினைவு மலர்







அமரர். திரு.

## வாரித்தம்பி ஈஸ்வரநாதன்

அவர்களின் இறை பாதம் அடைந்த குறிப்புக்கள் அடங்கிய

# நினைவு மலர்

# சமர்ப்பணம்



யாழ். முள்ளிப்பற்று முள்ளியான் நித்தியவெட்டைப்
பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வதிவிடமாகவும்
கொண்ட அவர்கள் 06-02-2022 ஞாயிற்றுக்கிழமை
அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

## அமரர் திரு வாரித்தம்பி ஈஸ்வரநாதன்

அவர்கள் நினைவாக வெளியிடப்படும்
இவ் நினைவு மலர் அன்னார் தம் ஆத்மா
இறைமடியில் நித்திய சாந்தி பெறவேண்டும்
என இறைவனைப் பிறார்த்தித்து
அன்னார் தம் பாதங்களுக்கே
இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்

# அமரர் திரு வாரித்தம்பி ஈஸ்வரநாதன்
## அவர்கள்

அன்னார், காலஞ்சென்ற வாரித்தம்பி, இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தவனம், சற்குணம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,

நவமணி(கனடா) அவர்களின் அன்புக் கணவரும்,

ஸ்ரீறங்கநாயகி, கோகுலன், விஜிதா, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

அறிவழகன், தர்ஷினி, தவனேந்திரன், யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும்,

புகனா, அபிஷா, அன்பு, தமிழ், தனுஷாந், துஷாலி, அனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலஞ்சென்ற வேலாயுதம், வல்லிபுரநாதன், இராஜலட்சுமி, கதிர்காமநாதன் மற்றும் தனபூபதி, மகேஸ்வரநாதன், யோகவதி, பாக்கியவதி, அதிஸ்ரலிங்கம், விமலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, சிவபாக்கியம், திருநாவிக்கரசு, நவரத்தினம், இராமலிங்கம் மற்றும் துவாரகாதேவி, ரேவதி, நடராஜா, மனோன்மணி, சின்னமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

காலஞ்சென்ற நடராசா, தனபாலசிங்கம்(குஞ்சுத்தம்பி) மற்றும் சந்திரஉதயம், சரஸ்வதி, மார்க்கண்டு, தங்கராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.



# நினைவு மலர்

**தோற்றம்**

13 - 03 - 1951

**மறைவு**

06 - 02 - 2022



அமரர். திரு.

## வாரித்தம்பி ஈஸ்வரநாதன்

....பிரிவால் வாடும்....

**குடும்பத்தினர் உறவினர்கள்**

# மனைவியின் அலம்பல்

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளி விளக்கே
உற்றவர் சுற்றமும் கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ பிரிவால் வாடி நிற்கின்ற
உள்ளங்கள் தேற்ற மொழியின்றி தவிக்கின்றதே
நின் உறவின் அடி தேடித் துடிக்கின்றதே.

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே? கலையாத
நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களால்
அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளைக்
காணிக்கையாக்குகிறோம்.

மண்ணோடு உங்கள் பூவுடல் மறைந்து
விட்டாலும் – நினைவுகள் எங்கள் இதயத்தில்
இருந்து ஒருபோதும் மறைவதில்லை.. பாசமான
நினைவுகளை எம்மிடம் விட்டு சென்றீர்
ஐயாவே.!! உங்கள் ஆத்மா இறையின்
பாதங்களில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!! சாந்தி! சாந்தி!!

**நவமணி – மனைவி**



# பிள்ளைகள் புலம்பல்

கண்ணில் உயிரை வைத்துகொண்டு
இன்று காற்றில் கலந்துவிட்டாய் – அப்பா
இந்த மண்ணில் உங்களை போல்
இனி யாரை நாங்கள் காண்போம்

விண்ணில் நட்சத்திரமாய் மின்னும் பிரிந்த உயிர்
என்று பிறர் சொல்லி கேட்டதுண்டு – அப்பா
உன்னை எந்த விண்மீனாய்
நான் என்று காண்பேனோ

அன்னை அடித்தாலும் அரவைனைத்து காத்தாயே
அத்தனை முறைதான் என்னை நாளெல்லாம்
அழைத்தாயே – அப்பா
இனி என்னை உன்னைப்போல் யார் அழைக்கக்கூடும்
உன் உடலோடு இந்த வீடும் வெறிச்சோடி போகும்

உங்கள் ஆத்மா இறையின்
பாதங்களில் சாந்திபெற பிராத்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!! சாந்தி! சாந்தி!!

**பிள்ளைகள் –**



# விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர்துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே.

# திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடஉந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணஉ வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமேயிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்
மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் அடியின்
கீழிருக்கவென்றார்.

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிஉகள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*

திருச்சிற்றம்பலம்

# விநாயகர் துதிகள்

வாக்கு உண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்கு
உண்டாம், மேனி நுடங்காது பூக்கொண்டு துப்பார் திருமேனித்
தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு!

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும்
கலந்து உனக்கு நான் தருவேன் கோலம் செய்
துங்கக் கரி முகத்துத் தூமணியே!
நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா!

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை இந்தின் இளம்பிறை
போலும் எயிற்றனை நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே!

விநாயகனே வெல்வினையை வேர் அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணில் பணிமின் கனிந்து!

பிடி அதன்உரு உமை கொளமிகு கரியது வடிகொடு
தனதடி வழிபடும் அவர் இடர் கடிகணபதி வர அருளினன் மிகு
கொடை வடிவினர் பயில் வலி வலமுறை இறையே!

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்அகட சக்கர விண்மணியாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்!

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக் கண்ணுதல் உடையதோர்
களிற்றுமா முகப் பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்!

அல்லல்போம், வல்வினைபோம் அன்னை வயிற்றில்
பிறந்ததொல்லை போம், போகாத் துயரம் போம்
நல்ல குணமதிகமாம் அருணை கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்!

முன்னவனே யானை முகத்தவனே! முத்திநலம் சொன்னவனே!
தூய மெய்ச் சுகத்தவனே! மன்னவனே! சிற்பரனே! ஐங்கரனே
செஞ்சடையஞ் சேகரனே! தற்பரனே! நின்தாள் சரண்!

யானை முகத்தான் பொருவிடையான்சேய் அழகார்
மான மணிவண்ணன் மாமருகன் மேனிமுகம் வெள்ளக் குமிழி
மதத்து விநாயகன் என் உள்ளக் கருத்தின் உளன்!

ஏத்தி எனதுள்ளம் நிற்குமால் எப்பொழுதும் மாத்தனி வெண்கோட்டு
மதமுகத்துத் தூத்தழல் போல் செக்கர் திருமேனிச்
செம்பொற் கழலைங்கை முக்கட் கடாயானை முன்!

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன் ஒளியானைப்
பாரோர்க் குதவும் – அளியானைக் கண்ணுவதும் கைத்தலங்கள்
கூப்புவதும் மற்றவன்தாள் நண்ணுவதும் நல்லார் கடன்!

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே கழியவரும்
பொருளே, கண்ணே – செழிய கலாலயனே, எங்கள் கணபதியே,
நின்னை அலாலயனே, சூழாதென் அன்பு!

மருப்பையொரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் – நெருப்பை அருந்த
எண்ணுகின்ற எறும்பன்றே அவரை வருத்த எண்ணுகின்ற மலம்!

நாரணன் முன் பணிந்தேத்த நின்று எல்லை நடாவிய
அத் தோரணவும் திரு நாரையூர் மன்னு சிவன்மகனே,
காரணனே, எம் கணபதியே, நற் கரிவதனா,
ஆரண நுண்பொருளே, என்பவர்க்கில்லை அல்லல்களே!

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும் கருணை பூக்கவும்
தீமையைக் காய்க்கவும் பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்!

மங்களத்து நாயகனேமண்ணாளும் முதல் இறைவா!
பொங்குதன வயிற்றானே பொற்புடைய ரத்தினனே!
சங்கரனார் தருமதலாய்ச் சங்கடத்தைச் சங்கரிக்கும் எங்கள்குல
விடிவிளக்கே எழில்மணியே கணபதியே!

அப்பமுடன் பொரிகடலை அவலுடனே அருங்கதலி
ஒப்பிலா மோதகமும் ஒருமனதாய் ஒப்புவித்து எப்பொழுதும்
வணங்கிடவே எனையாள வேண்டுமென அப்பனுக்கு
முந்திவரும் அருட்கனியே கணபதியே!

பிள்ளையாரின் குட்டுடனே பிழைநீக்க உக்கியிட்டு எள்ளளவும்
சலியாத எம்மனத்தையும் உமக்காக்கித் தெள்ளியனாய்த்
தெளிவதற்குத் தேன்தமிழில் போற்றுகின்றேன் உள்ளதை
உள்ளபடி உகந்தளிப்பாய் கணபதியே!

இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீ எழுந்து
என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க
பொன்வயிற்றுக் கணபதியே போற்றியென போற்றுகின்றேன்!

வெள்ளம்போல் துன்பம் வியனுலகில் சூழ்ந்திருக்க கள்ளம்
கபடம் கவர்ந்திழுக்க- உள்ளம் தளர்ந்திருக்கும் எங்கள்
தயக்கத்தை நீக்க வளரொளி விநாயகனே வா!

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்- உருவாக்கும் ஆதலால் வானோரும்
ஆனை முகத்தானைக் காதலால் கூப்புவர்தம் கை!

அருளெனும் கடல்முகந் அடியர் சிந்தையாம் பொருள்
பெருநிலஞ் சிவபோக முற்றிட வரமழை உதவி செவ்வந்து
யானையின் திருவடி இணைமலர் சென்னி சேர்த்துவோம்!

முக்கண் ஒருத்தன் மற்றென்னுள வாரி முயங்குதலான் மிக்க
வெண்கோடொன்று மேசிதையா நிற்கும் வெள்ளறிவை
உக்க கருமத மேகரு மாசை ஒழிக்கும் அருள் புக்கம்
செம்மேனி மனஞ் செம்மையாகப் புணர்த்திடுமே!

தலைவாரி கடுக்கைமாலைத் தனிமுதல் சடையிற் சூடும்
குழவி வெண்திங்கள் இற்றகோட்டது குறையென்றெண்ணிப்
புழைநெடுங்கரத்தாற் பற்றிப் பொற்புற இனைந்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய மலரடி சென்னி வைப்பாம்!

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்!
வெற்றி முகத்து விநாயகனைத் தொழ புத்தி
மிகுந்துவரும் வெள்ளைக்கொம்பன் விநாயகனைத்தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே! அப்பமும் பழம் அமுதும்
செய்தருளிய தொப்பையப்பனை தொழ வினையறுமே!

தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக் கடக்களிற்றைக்
கருத்துள் இருத்துவாம்! கணபதி என்றிடக் கலங்கும்
வல்வினை கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமமாதலால்
கணபதிஎன்றிடக் கருமமில்லையே!

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந்தொடர்பூட்டி இடைப்படுத்தித்
தறுகட்பாசக் கள்ளவினைப்பசுபோதக்கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும் வெள்ள மதம்பொழிச்
சித்தி வேழத்தை நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்!

அகரமென அறிவாகி உலகம் எங்கும் அமர்ந்து அகர
உகர மகரங்கள் தம்மால் பகருமொரு முதலாகி
வேறும் ஆகிப் பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகாரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக்கறக் கருணை புரிந்தல்லார்க்கு நிகரில்
மறக்கருணை புரிந்தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைத்து வாழ்வாம்!

வஞ்சகத்தில் ஒன்றானைத் துதிக்கை மிகத் திரண்டானை
வணங்கார் உள்ளே அஞ்சரண மூன்றானை மறை சொல்லுநால்
வாயனை அத்தன் ஆகித் துஞ்சவுணார்க் கஞ்சானைச்
சென்னியனை யாறானைத் துகளெழானைச்செஞ்சொல்மறைக்
கெட்டானைப் பரங்கிரி வாழ் கற்பகத்தைச் சிந்தை செய்வோம்!

பண்ணியம்,ஏந்தும் கரந்தனைக்காக்கிப் பால்நிலா மருப்பமர்
திருக்கை விண்ணவர்க்காக்கி அரதனக் கலச வியன்கரம்
தந்தைதாய்காக்கி கண்ணில் ஆணவ வெங்கரி பிணித்தடக்கிக்
கரிசினேற் கிருகையும் ஆக்கும் அண்ணலைத் தணிகை
வரைவளர் ஆபத்ச சகாயனை அகந்தழீஇக்களிப்பாம்!

நீடாழிஉலகத்து மறை நாலொடைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தலவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக் மாமேரு வெற்பாக வங்கூர் எழுந்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ.
முருகார் மலர்த்தாம் முடியானை அடியார் முயற்சித்திறம்
திருகாமல் விளைவிக்கும் மதயானைவதனச் செழுங்குன்றினைப்
பருகூதன் முதலாய்ப் முப்பத்து முக்கோடி புத்தேளிரும்
ஒருகோடி பூதே வருங்கை தொழுங்கோவை உற உன்னுவாம்!

ஆணிலேஅன்றி ஆளுயிர்ப் பெண்ணிலே அலியிலே
இவ்வடியனைப் போலவே காணிலே ஒரு பாவியைஇப்பெருங்
கள்ள நெஞ்சக்கடையானை ஆளையா ஏணிலே இடர் எய்த
விடுத்தியேல் என்செய்கேன் இனி இவ்வுலகத்திலே
வீணிலே உழைப்பே அருள் ஐயனே

ஓம் ஸ்ரீ விநாயகா போற்றி போற்றி போற்றி..!

# விநாயகர் துதிகள்

*திருச்சிற்றம்பலம்*

திருச்சிற்றம்பலம்

# தோடுடைய செவியன்

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. பூசி எனது. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழு தேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர் கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரிது வென்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர் கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரை மார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன் விடையூரும்இவ னென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்த தோர்காலம்இது வென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 5

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழு வேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர் கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 6

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழு வேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர் கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 6

சடைமுயங்குபுன லன்அனலன்எரி வீசிச்சதிர் வெய்த
உடைமுயங்கும்அர வோடுழிதந்தென துள்ளங்கவர் கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம் பொன்னஞ்சிற கன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளை வித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர் கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள் தோன்றும்பொழு தெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 8

தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரை யானும்
நீணுதல் செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர் கள்வன்
வாணுதல் செய்மகளீர் முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல் செய்பிரமாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறி நில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்
மத்தயானைமறுகவ்வுரி போர்த்ததோர் மாயம்இது வென்னப்
பித்தர்போலும்பிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர் மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல்எளி தாமே.

# தோடுடைய செவியன்

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# பித்தா பிறை சூடி

### 001

பித்தாபிறை சூடீபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேன்எனலாமே.

### 002

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
ஆயாஉனக் காளாயினி அல்லேன்எனலாமே.

### 003

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அன்னேஉனக் காளாயினி அல்லேன்எனலாமே.

### 004

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அடிகேளுனக் காளாயினி அல்லேன்எனலாமே.

005

பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேன்அறி வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீஉனக் காளாயினி அல்லேன்என லாமே.

006

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.

007

ஊனாய்உயிர் ஆனாய்உடல் ஆனாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி அல்லேன்என லாமே.

008

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி அல்லேன்என லாமே.

009

மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவார்அவர் துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அழகாஉனக் காளாயினி அல்லேன்என லாமே.

010

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்காள் அல்லேன்என லாமே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# மந்திரமாவது நீறு

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே!

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே!

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே!

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே!

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே!

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே!

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே!

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே!

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே!

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே!

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே!!!

*திருச்சிற்றம்பலம்*



**Dad**… I keep thinking about, you even though it pains. I'd give anything to relive those memories again. I miss you.

I never knew that being fatherless would make me feel so aimless, worthless, powerless, heartless and helpless. I miss you dad.

It hurts to think that you are not here anymore. Although I can't help but smile with tears in my eyes to think of how we cherished each and every moment of our lives together when you were alive.
I miss you dad.

As I grow older, no matter whose love gives me happiness – I will always be my daddy's little princess.
I miss you dad.

I have stopped looking at the sky in the night, because destiny has taken away my life's brightest star. I miss you.

I still get a lot of hugs, but none of them as warm as yours. I miss you dad.

Right from the time when you held me in your arms to the day when you saw me off for my first day in school, I am holding today on the beautiful memories that have made me the person I am today.
I miss you dad.

Just one last chance, I wish I could get to hug you.
Then I would hold you tight and never let go.
I miss you dad.

Dad, you taught me to be strong but sorry I'm letting you down… I can never be strong enough to accept that you are no longer here.
I miss you.



# நன்றி

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ,

அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்,

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவடையதாகிறது

மற்றொரு நாள், அது வேறோருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Contact Araviram for all of your post Hindu funeral needs

**Raguram - (647) 648-1154**
**Aravinth - (647) 784-0378**

We are now open
24 hours/7 days a week.

ARAVIRAM

araviramservices@gmail.com - www.araviram.com